இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 05 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 29 – வெள்ளிக்கிழமை 14 ஆகஸ்ட் 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 05 : Thiruvalluvar Year - 2057 - Aadi 29 - Friday 14 August 2026 - Chennai 8 Pages ₹ 5.00


### த.வெ.க. ஆட்சிக்கு வந்த மூன்றே மாதத்தில்

# சென்னையில் சொத்துவரி பன்மடங்கு அதிகரிப்பு!

## பொதுமக்கள் அதிர்ச்சி – கடும் கண்டனம்!

**சென்னை, ஆக.14-**

**தமிழ்நாடு அரசு சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட வீடு, வணிக நிறுவனங்கள், கடைகள் உள்ளிட்டவற்றுக்கான சொத்து வரியை அதிரடியாக பல மடங்கு உயர்த்தியுள்ளது மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

**இதுகுறித்து சென்னை மாநகர மேயரிடம் கூட கருத்து கேட்கப்படவில்லை என்று தெரிகிறது.**

**முதல்வர் விஜய்யின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் நகராட்சி நிர்வாகத் துறையில் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவு மக்களிடையே கடும் விமர்சனத் தையும் ஏற்படுத்தியுள்ளது.**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உதாரணமாக, அரையாண்டுக்கு ரூ.310 செலுத்தி வந்த ஒரு வீட்டுக்கு தற்போது ரூ.10,010 சொத்துவரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் பழைய வரியுடன் ஒப்பிடுகையில் ரூ.9,700 கூடுதலாகவும், சுமார் 32 மடங்கு அதிகமாகவும் வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

440 சதுரஅடி நிலப்பரப்பில் உள்ள அந்த சொத்தில் தரைத்தளத்தில் 1,000 சதுரஅடியும், முதல் தளத்தில் 1,000 சதுர அடியும் என மொத்தம் 2,000 சதுரஅடி கட்டிடப் பரப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், கட்டிடம் குடியிருப்பு பயன்பாட்டில் இருப்பதாகவும் மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஆண்டு சொத்து மதிப்பு ரூ.76,222 என கணக்கிடப்பட்டு, வயது தள்ளுபடி உள்ளிட்ட கணக்கீடுகளுக்குப் பிறகு அரையாண்டு சொத்து வரி ரூ.10,010 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுபோல், சென்னை அண்ணா நகரில் 2025-26ஆம் ஆண்டில் ரூ.5,000 சொத்துவரி செலுத்திய வீட்டுக்கு தற்போது ரூ.28,000 வரி நிர்ணயிக்கப்பட்டுள்ள தகவலும் கவனம் பெற்றுள்ளது. இந்த மறுமதிப்பீடு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பது மாநகராட்சி அனுப்பியுள்ள குறுஞ்செய்தியில் இடம் பெற்றுள்ளது.



அதில், புவியியல் தகவல் அமைப்பு (ஜி.ஐ.எஸ்.), பிற அரசு தரவுத்தளங்கள், செயற்கைக்கோள் படங்கள், சுய அறிவிப்பு உள்ளிட்டவற்றில் இருந்து பெறப்பட்ட சொத்தின் பயன்பாடு மற்றும் பரப்பளவு விவரங்களின் அடிப்படையில் சொத்துவரி மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி உயர்த்தப்படவில்லை என்று மாநகராட்சி கூறினாலும், ரூ.310 செலுத்தி வந்த ஒரு வீட்டுக்கு ரூ.10,010 செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சொத்து வரி உயர்வு குறித்து சென்னை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன் கூறுகையில், “சொத்து வரி உயர்த்தப்பட்டது எனக் கூறப்படுவது உண்மையல்ல,” என்றார்.

எனினும், புதிய சொத்து வரி அறிவிப்பில் முன்பை விட பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ள நிலையில், இதனை வரி உயர்வு என்று கூறாமல் வேறென்ன சொல்வது? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். முதல்வர் விஜயின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் நகராட்சி நிர்வாகத் துறையில் எடுக்கப்பட்டுள்ள சொத்து வரி உயர்வு நடவடிக்கை மக்களிடையே கடும் அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. த.வெ.க. அரசுக்கு கண்டத்தையும் அவர்கள் பதிவிட்டுள்ளனர்.

சென்னையில் உள்ள வீடு, வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து சொத்து குறித்த விவரங்கள் அனைத்தும் சென்னை மாநகராட்சி ஆவணங்களில் இடம் பெற்றுள்ளன. மாநகராட்சி ஊழியர்களே நேரில் வந்து வீட்டை டேப் பிடித்து அளந்து உறுதி செய்ததன் அடிப்படையில் தான் சொத்தின் பரப்பளவு குறிப்பிடப் பட்டுள்ளது. இதுபோல், லிப்ட், கார் பார்க்கிங் ஆகியவையும் மாநகராட்சியினரால் உறுதி செய்யப்பட்டவை தான்.

ஆனால், தற்போது ஜி.ஐ.எஸ். அடிப்படையில் ஆய்வு செய்து கட்டிடப் பரப்பளவு அல்லது பயன்பாட்டில் வேறுபாடு இருப்பதாகக் கருதப்படும் சொத்துகளுக்கு புதிய வரி மதிப்பீடு செய்துள்ளதாக மாநகராட்சி விளக்கம் அளித்துள்ளது. அப்படியானால், நேரில் வந்த மாநகராட்சி ஊழியர்கள் தான் குறைத்து மதிப்பீடு செய்தார்களா? நேரில் வந்து டேப் பிடித்து அளந்து குறிப்பிட்டதற்கு மாற்றாக ஜி.ஐ.எஸ். தரவு காண்பிக்கின்றது என்றால் புதிய மதிப்பீட்டு முறையில் குளறுபடி தவறு நிகழ்ந்துள்ளதா? என, அடுக்கடுக்கான கேள்விகளை மக்கள் முன்வைக்கின்றனர்.

மாநகராட்சியின் அதிகாரப்பூர்வ நோட்டீசில், மறுமதிப்பீட்டில் தவறு இருப்பதாக கருதும் பொதுமக்களுக்கு 15 நாட்கள் மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. நோட்டீஸ் கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட வட்டார துணை ஆணையரிடம் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக, ஒரு சொத்தின் மதிப்பீடு மாற்றி அமைக்கப்பட்ட பிறகு அது குறித்த தகவலை உரிமையாளருக்கு முன்கூட்டியே வழங்கும் போது, அதனை ஆட்சேபிக்கும் கால அளவு வழங்கப்படும். தற்போது, மதிப்பீடு செய்து வரியையும் உயர்த்தி விட்டு, செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் அதனை செலுத்த வேண்டும் என வாட்ஸ் அப் மூலம் மக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதிலும் ஒரு வாரத்துக்கு முந்தைய தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் குழப்பத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### மேயர் – துணை மேயரிடம் கருத்து கேட்கப்படவில்லை

சொத்து வரி உயர்வு குறித்து சென்னை மேயர். துணை மேயர் என்ற முறையில் எங்களிடம் இருந்து எந்தக் கருத்தும் கேட்கவில்லை. எங்கள் கவனத்திற்கு கொண்டுவராமலே, ஒப்புதல் பெறாமலே மாநகராட்சி ஆணையர் மறுமதிப்பீடு செய்வதை அறிவித்துள்ளார் என்று சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் கூறினார்.

குடியிருப்பு பகுதிகளுக்கு வரிகள் வேறு, வியாபார நிறுவனங்களுக்கு வரிகள் வேறு என்பதால் குடியிருப்பு பகுதிகளாக அறிவித்து விட்டு வியாபார நிறுவனங்களாக மாற்றியிருந்தால் ஆய்வு செய்து வரி வருவாயை பெருக்க வேண்டும் என்று இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக ஆணையர் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னை மாநகராட்சிக்கு ரூ.2000 ஆயிரம் கோடி முதல்வர் ஒதுக்கியிருந்தால் இந்த மறுமதிப்பீடு என்பது தேவையில்லாமல் பொதுமக்களுக்கு மேலும் பளுவை ஏற்ற வேண்டியிருக்காது. ஏற்கனவே 25 ஆண்டுகளாக வரி மறுமதிப்பீடு செய்யாமல் இருந்த நிலையில் ஒன்றிய அரசு கொடுத்த அழுத்தத்தின் காரணமாக கெய்ட்லைன்ஸ் படி வரி ஏற்றியுள்ளனர். ஆனால் கடந்த 2 ஆண்டுகள் தி.மு.க. ஆட்சியில் பொதுமக்கள் மீது மேலும் சுமையை ஏற்றாமல் வரி ஏற்றுவதை தவிர்த்தே வந்தோம். ஒன்றிய அரசு வருடத்திற்கு 6 சதவீதம் என்று அறிவித்த நிலையில் தி.மு.க. அரசு வரி ஏற்றாமல் தவிர்த்து வந்தது.

ஆனால் இப்போது புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளவர்கள் சென்னை மாநகராட்சியில் நிதிபற்றாக்குறை எந்த அளவுக்கு உள்ளது, இந்த துறை எப்படி செயல்பட்டு வருகிறது என்று ஆய்வு செய்தார்களா என்று தெரியவில்லை. என்று துணை மேயர் மகேஷ்குமார் கூறினார்.

### சொத்து வரி உயர்வு நிறுத்தி வைப்பு!

இந்நிலையில் தி.மு.க.வின் கடும் எதிர்ப்பினை அடுத்து சொத்து வரி உயர்வு அறிவிப்பை நிறுத்தி வைப்பதாக த.வெ.க. அரசு அறிவித்துள்ளது.

---

### டெல்டா மாவட்டங்களில்

## கேள்விக்குறியான விவசாயம்!

### ஏக்கத்தில் விவசாயிகள்!

*திருவாரூர், ஆக.14-*

டெல்டா மாவட்டங்களில் ஒருபோக சம்பா சாகுபடி செய்வதற்கு காவிரி தண்ணீர் வருமா.! வராதா! என்று விவசாயிகள் கவலையில் ஆழ்ந்து உள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ஆம் தேதி பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும்.

ஆனால் இந்த ஆண்டு பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தின் ஒருசில இடங்களில் விவசாயிகள் பம்ப் செட் மூலம் குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ளனர்.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர். எனவே ஒருபோக சம்பா சாகுபடி செய்வதற்காகவாவது காவிரி தண்ணீர் வருமா என்ற ஏக்கத்துடன் விவசாயிகள் காத்திருக்கிறார்கள். வறட்சியால் டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்கள் பாலம், பலாமாக வெடித்து காட்சியளிக்கின்றன. எதிர்பார்த்த அளவு மழையும் இல்லை என்பதால் முக்கிய நீர்நிலைகள் வறண்டு உள்ளன. நிலத்தடி நீர்மட்டமும் அதல பாதாளத்திற்கு சென்றுவிட்டதால் கால்நடைகளுக்கே தண்ணீர் கிடைக்குமா என்று சூழல் தான் நிலவுகிறது.

---

### பாதுகாப்பு அனுமதி பெற்று 5 மாதமாகியும்

## வடபழனி மெட்ரோ சேவை தொடங்கப்படவில்லை!

### பொதுமக்கள் ஏமாற்றம்!

*சென்னை, ஆக.14-*

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், பூவிருந்தவல்லி - வடபழனி இடையே மெட்ரோ ரயில் சேவை தொடங்க, பாதுகாப்பு அனுமதி அளிக்கப்பட்டு 5 மாதங்களை கடந்தும் இதுவரை முதல் ரயில் சேவை தொடங்கப்படவில்லை. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ.63,246 கோடி மதிப்பில் 116.1 கி.மீ. தொலைவில் 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் கலங்கரை விளக்கம் - பூவிருந்தவல்லி பைபாஸ் வரையிலான 4வது வழித்தடம் ஒன்றாகும்.

இத்தடத்தில், கலங்கரை விளக்கம் முதல் கோடம்பாக்கம் மேம்பாலம் வரை சுரங்கப்பாதையாகவும், கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் முதல் பூந்தமல்லி பைபாஸ் வரை உயர்மட்டப்பாதையாகவும் அமைகிறது.

இதற்கிடையில், 4வது தடத்தில் ஒருபகுதியாக, பூவிருந்தவல்லி வடபழனி வரை 14.6 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் வழித்தடம் கடந்த பிப்ரவரியில் அமைக்கப்பட்டது.

இத்தடத்தில், மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையரின் பல கட்ட சோதனைகளுக்கு பிறகு, இத்தடத்தில் மெட்ரோ ரயில் இயக்க கடந்த பிப்ரவரி மாத இறுதியில் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்பிறகு, மார்ச்சில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சட்டப்பேரவை தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக, தாமதமானது. தேர்தல் முடிந்து, த.வெ.க. அரசு ஆட்சிக்கு வந்து 5 மாதங்களை கடந்தும் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படவில்லை.

---

### கனிமவள மசோதா நிறைவேற்றம்:

## மாநில உரிமைகள் மீதான நேரடித் தாக்குதல்!

### நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கண்டனம்!

*புதுடெல்லி, ஆக.14-*

நாடாளுமன்றத்தில் விவாதங்கள் ஏதுமின்றி கனிமவளங்கள் சட்டத் திருத்த மசோதாவை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றியிருப்பது, மாநில உரிமைகள் மீதான நேரடித் தாக்குதல் என்று, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கண்டனம் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கனிம வளங்கள் மீது மாநில அரசுகளுக்கு உள்ள செஸ் வரி உள்ளிட்ட நிதி அதிகாரங்களைப் பறிக்கும் வகையில், மக்களவையில் முறையான விவாதங்கள் ஏதுமின்றி ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றியுள்ள MMDR சட்டத் திருத்த மசோதா, மாநில உரிமைகள் மீதான நேரடித் தாக்குதலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

2024ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் உறுதி செய்த மாநிலங்களின் கனிம வளங்கள் மீதான வரி விதிக்கும் அதிகாரத்தையே இத்திருத்தச் சட்டம் நீர்த்துப்போகச் செய்வதோடு, சுற்றுச் சூழலுக்கு பேராபத்தை விளைவித்து, மாநிலங்களின் நிதி சுயாட்சியை பறிக்கும் நோக்கத்தோடு அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி., ஒன்றிய பா.ஜ.க. அரசு இச்சட்டத் திருத்தத்தை திரும்ப பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

---

### மழைக்கால கூட்டத்தொடர் :

## நாடாளுமன்றத்தின் கடைசி நாளும் முடங்கியது!

### மக்களவை – மாநிலங்களவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, ஆக.14-*

மழைக்கால கூட்டத்தொடரின் கடைசி நாளான நேற்றும் ஒன்றிய அரசின் பிடிவாதப் போக்கால் முடங்கிய நாடாளுமன்றம், தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது. எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்ததால் கூட்டத் தொடர் 19 நாட்களும் இரண்டு அவைகளும் முழுமையாக முடங்கின.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்கிய முதல் நாளில் இருந்தே காவிரி நீர், மேகதாது பிரச்சினை, நீட் போராட்டம், அயோத்தி கோயில் நன்கொடை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின.

மழைக்கால கூட்டத்தொடரின் கடைசி நாளான நேற்று மக்களவை கூடியதும், காவிரி நதிநீர் பங்கீடு மற்றும் மேகதாது அணை பிரச்சினைகள் மற்றும் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க தி.மு.க. மற்றும் எதிர்க்கட்சி எம்பிக்கள் வலியுறுத்தின.

இதற்கு அனுமதி வழங்க மறுத்த சபாநாயகர், மக்களவை தொடங்கிய உடனே தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

**மாநிலங்களவையும் ஒத்திவைப்பு**

இதேபோல், மாநிலங்களவையிலும், காவிரி நதிநீர் பங்கீடு மற்றும் மேகதாது அணை பிரச்சினைகள் குறித்து விவாதிக்க தி.மு.க. எம்.பி.க்கள் தொடர்ந்து வலியுறுத்தினர்.

இருப்பினும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை மாநிலங்களவை தலைவர் ஏற்கவில்லை. இதையடுத்து, மாநிலங்களவையும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.